# இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு:

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை: சதம் 20.

ஆரமபம வரோதி ஞு (1889) ஆவணிமீ 23ம் உ    அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்    தொலைபேசி: 356

புத் - ௯0]   யாழ்ப்பாணம்   காலயுத்தி ஞு ஆவணி மீ உ௨ வெள்ளிக்கிழமை (18 8-1978)   [ஆல-௧௯


# சிவநெறியாளரின் சிவபூசை மாநாடு

## சப்த தீவுப் பகுதியில் சமயப் பிரசார யாத்திரை

"ஆத்மஜோதி" ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் தலைமையில் சைவப் பெரியார்களும், அடியார்களும் தீவுப் பகுதியில் சமயப் பிரசாரச் சுற்றுலாவும், நல்லை ஆலயத்தை நோக்கிப் பாதபவனியும் புறப்படவுள்ளனர். இதந் யாத்திரையின் ஓர் அங்கமாக 1-9-1978 வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிதொடக்கம் 5-30 மணி வரை சிவபூசா துரந்தர்களின் சிவபூசை மாநாடு வில்லூன்றி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவர்கள் 24-8-78 தொடக்கம் 30-8-78 வரை தீவுப்பகுதிக்குச் சமயப் பிரசாரச் சுற்றுலா மேற்கொள்கிறார்கள். இவர்களது யாத்திரைத் திட்டம் பின்வருமாறு அமையும்:-

24-8-78 மண்டைதீவு
25-8-78 நெடுந்தீவு
26-8-78 அனலைதீவு
27-8-78 புங்குடுதீவு
28-8-78 வேலணை, புளியங்கூடல், கரம்பொன்
29-8-78 காரைநகர்
30-8-78 நயினாதீவு

31-8-78 அன்று ஏழு ஊரிலுமுள்ள சைவ அடியார்கள் பலர் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற் கூடி, அபிஷேகம், பூசை, சற்சங்கம் ஆகியவை முடித்து நல்லூர் தேரில் முருகப் பெருமானின் பவனியைக் காணப் புறப்படுவார்கள். இறுபிட்டியை மோட்டார் வள்ள மூலம் சென்றடைந்து அங்கிருந்து பாதயாத்திரை ஆரம்பித்து வழியிலுள்ள சைவ ஆலயங்கள் அனைத்திலும் அபிடேகம் பூசை முதலியன கண்டு வேலணை மண்கும்பான் பண்ணை வழியாக வில்லூன்றி விநாயகர் ஆலயத்தை 1-9-78 அதிகாலை 3 மணிக்கு வந்தடைவர்.

அன்று அதிகாலை 4 மணி தொடக்கம் 5-30 மணி வரை சிவபூசாதுரந்தரர்களின் சிவபூசை மாநாடு அங்கு நடைபெறும். தொடர்ந்து பாதயாத்திரிகர்கள் வண்ணை வைத்தீசுவரன் கோயில், கைலாயப் பிள்ளையார்கோயில்களைத் தரிசித்துக் காலை ஏழு மணிக்குத் திருத்தேரில் எழுந்தருளும் நல்லூர் முருகன் சந்நிதானம் சென்றடைவர். (நமது நிருபர்)

## போர்த்துக்கேயரின் புறமதப் புரளியைப்புறங்கண்ட மல்லைநகர்ப் பழம் பிள்ளையார்

எல்லாமாய் எங்குமாய் இன்ப எழிலாய் இபற்றுமிறை
சொல்லாரும் தம்பிக்கைத் தூய பிரணவத்தின் தோற்றமதில்
மல்லாக மாநகர் வைகி வளமருள் மன்பதிதான்
பல்லாண் டியல்புதும் பணபார் பழங்கோயில் பாரினிலே.

இப் புராதன ஆலயத்திலே பெருந் திருவிழாக் காலம் 23—8—78 புதன்கிழமை 11-30 மணிக்குக் கொடி ஏற்றத்துடன் ஆரம்பித்து 1—9—78 வெள்ளிக்கிழமை நண்பகல் தேர் உலாவும் அடுத்த நாள் சனிக்கிழமை முற்பகல் 10-45 தீர்த்த நிகழ்ச்சியுடன் நிறைவுறும்.

## சைவ பரிபாலன சபை-யாழ்ப்பாணம்
## இலங்கை
## சைவசமயபாடப் பரீட்சை-77

### தங்கப் பதக்க பரிசில் பெறுவோர்

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையார் அகில இலங்கைரீதியில் பாடசாலை மாணவர்களுக்காக ஆண்டு தோறும் நவம்பர் மாசத்தில் நடாத்தும் சைவசமயபாடப் பரீட்சையில் 1977-ஆம் ஆண்டுக்கான பரீட்சையில் 8-ஆம், 9-ஆம் வகுப்புகளில் முதலிடத்தைப் பெற்றமைக்காகப் பின்வருவோர் தங்கப் பதக்கப் பரிசிலைப் பெறுகின்றனர்:-



செல்வி இரமணி சியாமா



செல்வி சாந்தினி

8-ஆம் வகுப்பு — செல்வி சாந்தினி சாமிநாதன்
யாழ். இந்து மகளிர் கல்லூரி

9-ஆம் வகுப்பு — செல்வி இரமணி சியாமா நடராசா
கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை

பரிசில்கள் செப்ரெம்பர் மாதம் ஆறந் திகதி அவ்வப் பாடசாலைகள் மூலம் வழங்கப்படும்.

## தமிழ்நாட்டில் சேக்கிழார் மன்றம்

### தவத்திரு. குன்றக்குடி அடிகள் அங்குரார்ப்பணம் செய்தனர்

நாட்டிலுள்ள தமிழ்மக்கள் ராமாயணத்தைப் பற்றி அதிகமாகத் தெரியாமலிருந்தாலும் கம்பரைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மக்களுக்கு பெரும்பாலோர்களுக்கு தெய்வீக சேக்கிழார் பெருமானைப் பற்றியும், அவர் அருளிய செந்தமிழான அறுபத்து மூன்று நாயனமார்களைப் பற்றியும் (பெரியபுராணம்) தெரிந்துகொள்ளாமலிருக்கின்றார்கள். ஆனதால் நம் நாட்டிலும் மற்றையநாடுகளிலுள்ள தமிழ மக்களிடத்தில் தெய்வீக சேக்கிழார் நெறிகளையும், அறுபத்து மூன்று நாயன்மார்களுடைய வரலாறுகளையும் பரவும்படி செய்யும்பொருட்டு அநபாய சோழமன்னனின் விருப்பத்திற்கேற்ப சுமார் 600 ஆண்டுகளுக்குமுன் தில்லையம்பதியில் ஸ்ரீமத். நடராஜப் பெருமான் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுக்க தெய்வீக சேக்கிழார்திருத்தொண்டர்களின் வரலாறுகளை (பெரிய புராணம்) அருளச் செய்து, அரங்கேற்றமும் செய்தனன் [illegible] ஆடிச்சுவாதி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநாளான ஆடித் திங்கள் 15 ஆம நாள் தலையம்பதியிலுள்ள திருதருமை ஆதீனத்தின் கிளை மடாலயத்தில் தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் தமிழ்நாடு சேக்கிழார் மன்றம் ஆரம்ப விழா நடைபெற்றது.

அடிகளார் தலைமையுரையில் சேக்கிழார் கிளை மன்றம் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் நிறுவ வேண்டுமெனவும், ஆ[illegible]

(வளர்ச்சி 2 ஆம் பக்கம்)

### மகா கும்பாபிஷேகம்

யாழ். வணணை, [illegible] ஜோதி ஞானிய சிவயோக முனீஸ்வர[illegible] ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் ஆவணித் திங்கள் 5ஆம் நாள் (21 8-78 திங்கட்கிழமை) பகல நிகழவிருக்கின்றது.

கும்பாபிஷேக நிகழ்ச்சிகள்

அதிகாலை 3-30 மணி ஐயனார் கோவிலடி விசுவேசவிநாயகர் ஆலயத்திலிருந்து பிரதிஷ்டா மூர்த்தி எழுந்தருளல்,

4-00மணி பிரதிஷ்டை, ஏனைய கிரியைகள், பகல் 12-45 மணி 1-45 மணி மகாகும்பாபிஷேகம்.

பஜனை : யாழ். சைவ சமய

(வளர்ச்சி 3ம் பக்கம்)

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

காலயுத்தி ஞூ ஆவணி மீ உ-உ வெள்ளி

## நித்திய கரும நியமம் சமயிக்கு இலக்கணம்

முன் ஒரு பொழுதுமில்லாத வகையிலே நாடு முழுவதிலும் திருக் கோயில்களிலே பெருவிழாக்கள் மகாகும்பாபிஷேகம், சங்காபிஷேகம் முதலியனவும் சமய மாநாடுகள், எழுச்சி இயக்கங்கள், பயிற்சி வகுப்புகள் என்ற முறையிலே பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்ற வண்ணமாக இருக்கின்றன. சமயாபிமானத்துக்குத் தகுந்த அறிகுறிகள் இந்த ஆர்வ நிகழ்ச்சிகளிலே காணப்படுகின்றன. இவை யாவும் காட்சிக்கும் செவிமடுத்தலுக்கும் உரியனவாகவே பெரும்பாலும் இருக்கின்றன. வைதிக சைவ சமயி ஆக உள்ளவர்கள் எண் கணக்கில் மிகச் சிலரே. இக் கூற்றுக்கு யாம் வருவதற்குரிய காரணம் என்னை!

சமயவாழ்வு ஒன்று சமய அறிவு இன்னொன்று. ஒன்றை அறிந்தும் அதனைச் செய்கை முறையிற் சாதனை பண்ணுது விட்டால் அவ்வறிவாற் பயன் உண்டாகாதென்பது ஞானிகளின் கருத்தாகும்.

நாவலர் பெருமான் நித்திய கருமத்தைப் பற்றிய நடைமுறையை விளக்கிக் காட்டியிருக்கின்றனர். சைவப் பெரியாரும் அவ்வாறு குறிப்பிடுகின்றனர்.

சைவ போதம் இரண்டாம் புத்தகத்தில் நித்திய கருமம் என்ற பொருள் பற்றி விளக்கிய சைவப் பெரியாரின் 'கருத்துக்களில் ஒன்றை இங்கே தருகின்றோம்.

"கடவுள் வழிபாடு என்ற முயற்சிக்கு ஒரு விதமான அன்டுகோலுமில்லை; அதைச் செய்யாவிட்டால் துன்பம் தோன்றுவதுமில்லை; அதை நினைக்கப் பண்ணுதற்கு இயல்பிலே ஒரு வழியுமில்லை. ஆதலால் நாம் ஒவ்வொரு நாளும் கடவுளைப் பலமுறை நினைப்பதற்காகச் சிலவழிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவை நித்திய கருமம் என்று சொல்லப்படும்."

சமயியாய் இரு என்ற போதிக்கும் போதெல்லாம் வேதசிவாகம விதிகளையும் மெய்கண்ட சாத்திர தத்துவங்களையும் திருமுறைப் பாடல்களையும் எடுத்துக் காட்டுகின்றோம். போதனை பெறுபவர்கள் இவற்றை அல்லது இவற்றிற் சிலவற்றைச் சாதனை செய்கின்றார்களா என்பது சிந்திக்கப்பட வேண்டியதொன்ற.

இதற்கு ஒரு வழியுண்டு. பாடங்களைக் கற்று அவற்றை ஒப்பிப்பவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படுவது போலச் சமயிகளாகவுள்ளவர்களுக்கும் உவகை உபகாரம் உதவுவது தான் அந்நெறி.

நிலைபெறுமா றெண்ணுதியேல் அல்லது சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் அல்லது வேறெந் திருமுறையையோ ஓதும்பொழுது அந்தந்தமொழிகள் குறிப்பிடுகின்ற செயலை நாம் செய்கின்றோமா என்ற சிந்திப்போமாயின் படிப்பதொன்று நடப்பது வேறொன்றுயிருக்கும் விபரீதம் புலப்படும்.

கல்லூரி மாணுக்கர்களிலே சமயிகளாக வாழ்கின்றவர்கள் யார் யார் என்ற பரீட்சை ஒன்று நிகழ்த்தப்பட்டு அத்திறத்தோருக்கு பரிசு கொடுப்பது வழக்கமாய்வரின் இந் நெறியை எல்லா மாணுக்கர்களும் பின்பற்றத் தூண்டப்படுவார்கள். அவ்வாறே சைவ இயக்கங்களில் ஈடுபடுகின்றவர்கள் சமயாநுட்டானம் பெற்றவர்களாய் இருப்பின அவ்வியக்கத்துக்கு எழில் உண்டாகும். சமய தீட்சை பெற்றுற் புனித வாழ்வு இன்றியமையாததாகின்றது.

நாவலர் அவர்கள் இரவு பகலாகச் சமய போதனைகளைச் செய்தார். தாம் போதித்தன யாவற்றை[ளும்] வாழ்க்கையிலே தாம் பயின்றவர்தார் என்பது தான் அப்பெரியாரின் உபதேசங்களுக்கு மகிமையை அளிக்கின்றது. அவ்வாறே சைவப் பெரியாரும் சமயியாக வாழ்ந்து முன்மாதிரியாக விளங்கினர். இந்த நெறியைப் பேணுதலே சைவ எழுச்சிக்கோ, உணர்ச்சிக்கோ வேண்டப்படுவது நூற்பயிற்சிபோல நித்திய கருமப் பயிற்சியும் மிக அவசியமானது.

"ஆக்கையாற் பயனென்
அரன்கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப்
போற்றி யென்னுத இவ்
ஆக்கையாற் பயனென்."

## செவ்வேலேந்திடும் சுந்தரக் காட்சி!

— சிவஸ்ரீ என். வீரமணி ஐயர் அவர்கள் —

இராகம்: ஷண்முகப்பிரியா — தாளம்: ஆதி

பல்லவி

சந்தமிழ் நல்லையிலே செந்தமிழ்க் கந்தன் வரும்
சுந்தரக் காட்சியை வந்து பாரடி தோழி (சந்)

அநுபல்லவி

சிந்தை உருக்கியே விந்தை அருளை அவன்
தந்தெமை ஆட்கொள்ளும் தயாபர னுய்வரும் (சந்)

சரணம்

பைந்தமிழ் பாடியே பக்தர் துதிசெய்ய
புந்தி மகிழ்ந்தடியர் போற்றித் துதித்திட
முந்தும் செவ்வேலேந்தி முத்திதரும் தெய்வம்
சந்தபி முழங்கிட தோகை மயில்மீதில் (சந்)

## நேயர் நெஞ்சம்

நல்லூர்த் திருவிழா

தேர், தீர்த்த நிகழ்ச்சிகள்

# அஞ்சல் நேரத்தை கூட்டுங்கள்!

இ. ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பம்

### தகவற்பகுதியினர் நிகழ்ச்சியைப் படமாக்கலாமே!

ஆசிரியர்,
"இந்துசாதனம்"
ஐயா, வணக்கம்.

நல்லைத் திருமுருகன் தேர், தீர்த்தத் திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் அஞ்சல் செய்வது வழக்கமாகும். இந் நிகழ்ச்சிகளை வழமையிலும் பார்க்க இரு மணித்தியாலமாவது கூடிய நேரம் ஒலிபரப்ப வழி செய்து தரும்படி யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தேர்த் திருவிழா அன்று அதிகாலை 5 மணிமுதல் முற்பகல் 11 மணி வரையாவது ஒலிபரப்புச் செய்ய நடவடிக்கையெடுப்பது விரும்பத்தக்கது. அன்று பிற்பகல் தேர்த் திருவிழா நிகழ்ச்சிகள் தொடர்ந்து அஞ்சல் செய்யும் வாய்ப்பிருக்கிறது. தீர்த்தத் திருவிழா நிகழ்ச்சிகளும் அப்படியே. சிறந்த பக்தர்கள்; இசை அறிஞர்களது உருக்கமான பஜனை நிகழ்ச்சிகள் எல்லாவீதிகளிலும் நடக்கின்றன.

இப்படி நடந்தாலும்கூட பக்தச் செல்வர்களான இவர்களுக்கும் இடம்கொடுக்க வேண்டுமென்ற கருணையுணர்வு சற்றுமில்லாத அதிகாரிகள் வழமையில வந்து பக்தர்களது உள்ளத்தை வேதனையடையச் செய்துவரும் வழக்கம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. விழா நிகழ்ச்சிகளைத் தகவற் பகுதியினர் திரைப்படமாகக் காட்டக்கூடாதா? எனப் பக்தர்கள் வேண்டுகின்றார்கள்! இதை நம் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் சிந்திக்காதது ஏனோ?

இம்முறையாவது இத்தகைய குறைபாடுகளின்றி சிரமத்தைப் பொருட்படுத்தாது சிறந்த தொண்டுகளுக்கு ஊக்கங் கொடுத்து யாவரும் மெச்சத்தக்க வகையில் தமது கடமையைச் செய்ய முன்வருவார்களென்று ஆவலுடன் எதிர் பார்க்கின்றோம்.

நேரடி ஒ. ப. அஞ்சலுடன்மட்டும் நின்றுவிடாது, இத் தொடர்பில் இரு தினங்களும் ஒவ்வொரு நிகழ்ச்சித்தொகுப்பைஒலிபதிவு செய்து பின்னர் வானொலியில ஒலிபரப்பநடவடிக்கைஎடுப்பதும் வரவேற்கத்தக்கது அதிகாரிகள் ஆவனசெய்து பலஇலட்சக்கணக்கான மக்களது நீண்டகாலத்து ஆசையை நிறைவேற்றிவைப்பார்களா? இதற்கெனச் சிறந்த ஆற்றல் வாய்ந்த நல் அறிஞர்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

நிகழ்ச்சிகள் தெளிவாகக் கேட்கத்தக்கவையாக அமைக்கவேண்டும். வழமையில் தெளிவாகக் கேட்க முடிவதில்லையே ......!

இங்ஙனம்
கா. இரகுநாதன்
உப தலைவர்,
யாழ் சைவசமய அபிவிருத்திக் கழகம்,
நாயன்மார்கட்டு.

12-8-78.

### திருத்தம்

சென்ற இதழில் ஆசிரிய உரையில் திருமூல்நாயனர் என்பது திருமூலநாயனர் என்றிருக்க வேண்டும்.

## மகாகும்பாபிஷேகம்

( -ம் பக்கத்து வளர்ச்சி)

அபிவிருத்திக் கழகம் - நாயன்மார் கட்டு, திருமுறைமன்றம் - யாழ்ப்பாணம். நல்லூர் பஜனைச்சபை,

பிரதிஷ்டா குரு: இணுவில், சிவகாமி அம்மன் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள்

வரவேற்புரை: வித்துவான் க. கணபதிப்பிள்ளை

சொற்பொழிவு: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

பஜனை: மகாஜனக் கல்லூரி மாணவர்கள்

மாலை நிகழ்ச்சிகள்:

அருளுரை: நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சொற்பொழிவு: புலவர் ஈழத்துச் சிவானந்தன், பண்டிதை பொன். பாக்கியம். (ஐ)


## தமிழ்நாட்டில்சேக்கிழார்

1-ம் பக்கத்து வளர்ச்சி)

காங்கும் சேக்கிழார் திருவுருவச் சிலைகளை நிறுவவேண்டுமென்றும், சமயத்தை தொண்டின் மூலமாக வளர்ச்சி அடையும்படி செய்தாக வேண்டுமென்றும் அவ்வாறு செய்யாவிட்டால் தம்முடைய சமயம் தற்சமயம் இருந்து வரும் நிலைமையவிட பிற் காலத்தில் மிகவும் பலவீனம் அடைய நேரிடும். ஆதலால் வேறுபாடுகளை மறந்து சமுதாய மக்களிடத்தில் பழகல் வேண்டும். சேக்கிழாரின் கொள்கைகளை தம்முடைய உரிமையாக ஆக்கிக் கொள்ளல் வேண்டுமென்றும் அந்தந்த ஊர்மக்கள் தங்களுரிலுள்ள திருக்கோவில்களை தங்களுடையதாக ஏற்றுக் கொண்டு நாடோறும் ஒன்று பட்டு கோயிலுக்குச் சென்று வழிபாடுகள் செய்து அருள் பெற வேண்டுமென்றும், மன்ற அமைப்பாளரான தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருக்கோவிலின் திருப்பணிக் குழுவின் தலைவர் திருவாளர் R. கனகசபைபிள்ளை அவர்கள் வரவேற்புரை வழங்குகையில் நம் நாட்டுத் தமிழ் மக்களிடத்திலும், வெளிநாடுகளில்வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களிடத்திலும் தெய்வீக சேக்கிழார்பெருமானின் நெறிகளையும் அற

( வளர்ச்சி 4-ஆம் பக்கம் )

## மக்களும் - மாக்களும்



பக்தர்: 'மாமிச உணவு மனிதனை — அவனது நிலையிலிருந்து வேறு நிலைக்கு இழுத்துச் சென்றுவிடுகிறது'' — என்று சிவபாதசுந்தரனுர் விழாவில் பெரியார் சண்முகம்பிள்ளை உருக்கமாகப் பேசினர்.

சித்தர்: பேசி என்னகும் மனிதன் மிருகமாகவே மாறிவிடுகிறன். இது உணவின் தன்மையே, மதுவையும் மாமிசத்தையும் மக்கள் புறக்கணிக்க மாபெரும் திட்டந்தீட்ட வேண்டும். மாகாத்மாக்கள் முன்வருவார்களா?

"முனைந்தால் முடியாதா"

(நாயன்மார்—நாதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M B 1218

1. மதியாபரணம் பாலசுப்பிரமணியம், உரும்பிராய் கிழக்கு — வழக்காளிகள்

எதிராக

1. புண்ணியமூர்த்தி கணேசமூர்த்தியும் பெண்
2. தவமணியும், கோண்டாவில் வடக்கு —எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் M B 1218 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1978ம் ஆல செப்டெம்பர் மீ 8ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:

ரூபா 7912-50 பின் 10-5-76 தொடக்கம் 31-1-77 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா607-50 இதில் 11-11-77 இல் வழக்காளியிடம் ரூபா 1000/- கொடுக்கப்பட்டது

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை நிகாவளை ). 2ம், பிறகும்நிக்காவளை நி ப. 4½ இருபாகங்களுமொன்ருய் உள்ள நி. ப. 6½ கல வீடுகளும், பயிர் வகைகளும் தெற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் இந்தப்பரப்பு ஆறரைக்கும் எல்லை கிழக்கு:- சின்னையா இராசநாயகத்தின் ஆதனம், வடக்கு:- ஒழுங்கை மேற்கு:- எங்களுக்குரிய ஆதனம், தெற்கு:- பொன்னையா பெண் பரிமளத்துக்கும் சீனியா செல்லையாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள், கிழக்கெல்லைக் காணிக்கும் மேற்கெல்லைக் காணிக்குமுரிய கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புற நீங்கலாக மிகுதியடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்

சி. செ. மாரிமுத்து
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்

விதானைவளவு,
சித்தங்கேணி,
18-7-78

146 18-8-78

---

## கோட்டு விளம்பரம் விளம்பரம்

ஈடு: 1847

1. ஆறுமுகம் கந்தையா இராசையாவும்
2. பெண் வள்ளிப்பிள்ளையும் ஏழாலை வடக்கு ஏழாலை —வழக்காளிகள்

எதிராக

1. நாகலிங்கம் தங்கராஜா ஏழாலை வடக்கு, ஏழாலை —எதிராளி

மல்லாகம் மாவட்டக் கோட்டின் ஈடு 1847 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆ செப்டெம்பர் மீ 6ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிககுள் நின்று பிரசித்தஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:-

ரூபா 4784-55 பின் 5-9-77 தொடக்கம் 13-12-77 வரைக்கும் ரூபா 4000/-கசு 8 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுமளவும் வரையும் 9 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 425-80

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று கட்டுவன் இறைபலட்டன் நிலபபரப்பு 6 பனைகளும் இதற்கு எல்லை கிழக்கு:- முத்து சிவகுருவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடகசு சிவசுப்பிரமணியம் பெண் நாகம்மாவின் ஆதனம், மேற்கு:- ரோட்டு, தெற்கு:- கந்தையா பெண் அன்னமுத்துவின் ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

சி. செ மாரிமுத்து
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்

விதானை வளவு
சித்தங்கேணி
14-7-78

147 18-8-78

---

உ
திருச்சிற்றம்பலம்.

## நம் சிந்தனையில் நயந்தது

பண்ணிற் பொலிந்த வீணையர் பதினெண்
கணமும் உணராநஞ்
சுண்ணப் பொலிந்த மிடற்றினர் உள்ளம் உருகின்
உடனுவார்
சுண்ணப் பொடிநீ றணிமார்பர் சுடர்பொற்
சடைமேல் திகழ்கின்ற
வண்ணப் பிறையோ டாணீர் வாய்மூர்
அடிகள் வருவாரே.

( திருஞானசம்பந்த மூர்த்திகள் — திருமுறை 2
திருவாய்மூர்த் திருப்பதிகம்
பண் நட்டராகம் - சுவாமி வாய்மூர்நாதர்
தேவி - பாலினு நன்மொழியாள் )

முதலாங் குரவர் வாய்மூர் நாதரின் ஆடலைத் தரிசித்து ஆனந்தங்கொண்டு அப்பேற்றை இரண்டாம் குரவரும் உடன் அனுபவிக்க நிகழ்ந்த பொழுது திருவாய் மலரப்பெற்ற திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

---

## சைவப் பெரியார் பொன்மொழிகள்

### வழிபாடு:

கடவுள் வழிபாடு, பெரியோர் வழிபாடென இருவகைத்து. கடவுள் வழிபாடு சிவ புண்ணியம், பெரியோர் வழிபாடு பசு புண்ணியம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னுந் திருவாக்கை நிலையாகப் பிடித்துத் தாய் தந்தையருக்கு வேண்டிய தொண்டுகளை ஆசையோடு செய்தல் வேண்டும். இறந்தபின் அவர்களுக்குப் பூசை முதலியன செய்பவர்கள் அவர்கள் உயிரோடிருக்கும்போது மரியாதை செய்தலும் ஏவல் செய்தலும் மிக அவசியம் என்று கொள்ளவேண்டும் இவர்கள் தமையன், குரு முதலிய பெரியோரையும் பேணி நடத்தல் வேண்டும். கடவுளை வழிபடுவோர் கடவுளால் விதிக்கப்பட்ட சமயாசாரங்களைக் கைவிடலாகாது தாய் தந்தையரையும் அவர்களுடைய முன்னோரையும் வழிபடுவோர் எவ்வகை வசதியீனம் வந்தாலும் அவர்கள் அநுசரித்த குலாசாரந் தேசாசாரங்களையும் ஒரு காலமுங் கைவிடலாகாது. அவைகளை விட்டோர் அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெருர். பெண்கள் மற்றைய கல்வியோடு சமையல் முறையுங் குழந்தைகளை வளர்க்கும் முறையுங் கற்றல் வேண்டும். யாவரும் நித்திய கருமம் முறைப்படி செய்தல் வேண்டும்.

— சைவக் கிரியை விளக்கம்

### சிவநிந்தை :

மிகக் கொடிய பாதகம் சுவாமியுடைய திருமேனியிலே பொய்க் கரங்களையும், பொய்க் கால்களையும் கட்டுதலாம். இவைகளைச் சுவாமியின் மேலே கயிற்றினல்வரிந்து இறுக்கிக் கட்டுதல் எவ்வளவு கொடிய சிவத் துரோகமாகும். அதைச் சுவாமியென்று நினைப்பவர்கள் இந்தக் கொடிய வேலையைச் செய்வார்களா? இப்படியான பொய்க் கைகளையும் கால்களையும் எங்களுடைய உடம்பிலே யாராயினும் கட்டுதற்கு வந்தால் நாங்கள் விடுவோமா? சுவாமியை ஒரு பாவைப்பிள்ளையென்று நினைப்பவர் மாத்திரம் அஞ்சாமல் இப்படியான செயல்களைச் செய்வார். சுவாமியைப் பாவைப் பிள்ளையாக நினைத்தல் சுவாமியை எவ்வளவு நிந்திப்பதாக முடியும்.

— சைவ போதம் 2

---


விரைவில்
வெளிவருகின்றது!!

சைவப் பெரியார்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள்
எழுதிய

**சைவக் கிரியை விளக்கம்**

விபரங்கட்கு :
அதிபர்,
சைவப்பிரகாச
அச்சியந்திரசாலை,
50, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 356


"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இல்லாச் செல்வரும் சேர்வது நாடு"

---


சைவப் பெரியார்

## திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய நூல்கள்

குறிப்பு:- சைவப் பெரியாரின் நூற்ருண்டு விழா நிகழும் இவ்வேளையில் இந் நூல்களை முன் படித்தவர்கள் மீண்டும் படிப்பதும், முன் அறியாதவர்கள் இப்பொழுது அவற்றைப் பெற்றுக் கற்கவும் வேண்டியது சைவப் பெரியாருக்கு நாம் காட்டும் நன்றி உணர்ச்சி.

1. சைவ போதம் 1ம் புத்தகம்
2. ,, 2ம் புத்தகம்
3. திருவருட்பயன்
4. அநூல்
5. அளவை நூல்
6. படிப்பித்தலின் முறைகளும் விதிகளும்
7. திருக்குறள் மணிகள்
8. திருவாசக மணிகள்
9. சைவ சமயம்
10. சைவ சமயத்தின் பெருமை
11. சைவக் கிரியை விளக்கம்
12. திருப்பெருவடிவம்
13. கந்தபுராண விளக்கம்
14. The Saiva School of Hinduism
15. Glories of Shaivaism
16. On Outline of Sivagnanabotham
17. Essentials of Logic
18. Arumugha Navalar
19. தருக்க நூல்
20. தருக்க நூற்சாரம்

### சிறு பிரசுரங்கள்

1. சிவபெருமான் விரதம்
2. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்
3. திருநாவுக்கரசு நாயனுர்
4. சுந்தரமூர்த்தி நாயனுர்
5. மாணிக்கவாசக சுவாமிகள்
6. சந்தனுசாரியார்


---

## ஈட்டு வழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இலக்கம் 13918

(1) இளையதம்பி சுப்பிரமணியம் (2) பெண் கண்மணி கம்பர்மலை, வல்வெட்டித்துறை. — வழக்காளிகள்

எதிராக

(1) வேலன் வீரன் மகள் (வள்ளி) கம்பர்மலை வல்வெட்டித்துறை — எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த நீதிமன்றத்தால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிககப்படுமாதனத்தை 1978 - ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 2-ஆம் திகதி (2-10-78) திங்கட்கிழமை முற் பகல் 9.00 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று சமரபாகுதேவன் குறிச்சியிறை "இராப்பிணியன் தோட்டம்" நி. பர. 10½ எல்லை கிழக்கும், வடக்கும் கந்தர் வேலும்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு கந்தர் வேலும்பிள்ளையின் உரிமைகாரருக்குடைய ஆதனமும், ஒழுங்கையும், தெற்கு வல்லியப்பர் வேலுப்பிள்ளையின் உரிமைகாரருக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள் வேம்பு. அடங்கலிற் சொரியலாய் 107/108 பங்கும் இதற்கு இருக்கும் வீடு. கொட்டில்கள் நீத்தமாகவும்

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை : | 4890 | 00 |
| வட்டி ரூபா 3000/-க்கு 12 வீதப்படி 17-3-77 தொடக்கம் 19-9-77 வரை | 180 | 00 |
| | 5070 | 00 |
| வட்டி ரூபா 5070/-க்கு 9 வீதப்படி 20-9-77 தொடக்கம் 2-10-1978 விற்பனவு வரை | 456 | 80 |
| | 5526 | 80 |

( வழக்குச் செலவு இதில் சேரவில்லை. )

க. நல்லலிங்கம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

வி. எம்- ரோட்,
பருத்தித்துறை, 21-8-78

147 18-8

---

" அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை மறத்தலி னூங்கில்லை கேடு "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu Organ

Friday, August, 18. 1978.

# MORAL RE-ARMAMENT— MEANING OF RELIGIOUS PRACTICE

The announcement that the prices of cigarettes and arrack have been increased makes us draw a sigh of relief in the belief that this step might lead to Temperance first and Total Prohibition later on. It may be a ludicrous expectation to forsee the age of abstinence in this country. Equally funny it may be for anyone to hope that prohibitive prices of tobacco and liquor would dampen the enthusiasm of those addicted to the twin evils of Drinking and Smoking.

In this year of the Centenary of the birth of a great Saiva leader — Saiva Periyar Shivapadasundarampillai - it would be natural for us to tell our readers and through them the younger generation that the Great Leaders of the glorious past had been Tee totallers and non-smokers So uncompromising in their contempt for and abhorrence of these evil habits they were that they never failed in the course of their discourses and writings to condemn drinking and smoking as injurious to religious practice.

Across the waters in the mighty sub-continent of India there have been continuous efforts to achieve Total Prohibition. Mahatma Gandhi and his disciplined band of followers in the historic struggle for political freedom had by precept and practice called for abstinence from these evil habits This agitation was supplementary to the work of religious leaders.

The horrible happenings in the world — the first, the second and the third world all included— unmistakably indicate that the moral standard of humanity has declined to frightening depths because of the hold, alcohol has on the method of living. If petrol has become an absolute necessity for maintaining the power of nations, liquor also has become a must for mobilising strength to conduct aggressive campaigns. Our land has the reputation of being religious minded. The practice of Saiva Religion distinctly disapproves of Drinking as one of the first five prohibited evils. Speaking for the people of the Saiva Faith we can only repeat our oft-repeated appeals to the people in the name of our Sacred Religion that we all should be ready to enforce the prohibitions pointed out in our Scriptures and the works that interpret the Sacred Books. Moral re-armament has become an immediate need and this can be achieved only by strict adherence to religious practice.

வெளிவந்துவிட்டன!

சைவப்பெரியார்

சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A.

அவர்கள்

நூற்றுவது

பிறந்த தினத்தை முன்னிட்டு

அவர்கள் எழுதிய

சைவபோதம்

முதலாம் புத்தகம் 1-50

சைவபோதம்

இரண்டாம் புத்தகம் 1 50

விபரங்கட்கு: அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை

450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

## Saiva Periyar Centenary Reproduction
## GLORIES OF SHAIVAISM

*By S. Shivapadasundaram B. A.*

(continued from last issue)

Everyone of our Saints has sung praises of Thiru-Neeru and have also exhorted us to wear it with devotion. Manickavachakar says, "If desirous of wearing Thiru-Neeru, wear it in abundance..." (பூசுவதான் திருநீறே நிறையப் பூசி). This abundance is a sign of our real love for Parashakti. If it is worn niggardly, it shows half-heartedness, absence of due regard and ignorance of its being the abode of Parashakti. Umapathishivam regards as unholy persons those whose hearts are dead to Sacred Ashes and to the Shivalayam திருநீறும் சிவாலயமும் உள்ளத்துட் சென்ற புலையர்பாற் செல்லாதே. Manickavachakar says in another place that though he does not dread things ordinarily dreaded such as poisonous snakes and sharp arrows, he does dread the sight of those Shaivites who do not wear Sacred Ashes (வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே).

Sacred Ashes should be available everywhere in the Saiva world. It is obtained from burnt dung of the cow, an animal held in veneration by us All places inhabited by Shaivites have cows. Besides, fortunately or unfortunately, it is sold everywhere

### Worship

The core of worship is the thought of God which undoubtedly, is the sweetest of all thoughts says Appar Swamikal "O men, please come; just a word If I give you a fruit, will you be able to eat it? That Pure Thing, that Lord who wins all souls to His Feet, is a fruit very sweet, indeed to those free from faults. As we have faults, we cannot have that infinite bliss enjoyed by saintly souls. But can get at least limited joy if we turn our thoughts to God and worship Him. The joy, though limited, is superior in quality to all other joys and is the highest within our reach.

Umapathishivam says, "In sublimity, in the difficulty of comprehension and of access and in endless love. He has no equal." Let us try to understand the four points. The stars in the sky are numberless. Of these stars, our Sun is the smallest. Still, it is 1 300,000 times bigger than our earth, such a vast universe is nothing before Him. Moreover, the inanimate, non-intelligent universe is nothing before us, souls. The bringing to my consciousness these great truths is my first step in worship. Seeing that I am infinitely superior to the universe itself I cannot set any values on the things of this world. Since a thing of this world is a speck in this world which again is a speck in the universe, such things of this world as friendship and enmity, wealth and want, relationship and non-relationship, attractions and repulsions, adorations and abuses are of no consequence to me. They cannot captivate my mind, still less take possession of me. I am free from thoughts of them My thought is only on God and His infinite Love I contemplate and sing songs in praise of Him. There are numerous songs in Tamil, which only praise Him and His Love. The following songs are known to every Shaivite and contain nothing but praise:

1 உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

2 மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

3 தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலனோர் கைம்மாறே.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, August 18, 1978.

Edited by ... P. N. Sivapirakasam

*Letter to the Editor*

## Spiritualization of Politics

In earlier communications the appeal to turn our minds and hearts to God and Religion has been made with all due deference and in a spirit of the utmost humility. The situation in 1958 is bad enough, the situation in August 1977 was much worse; the prevailing situation is still very much worse and greater still. Religious and spiritual remedies are the last and only resort Views, opinions and suggestions from the readers of your esteemed Journal and others are respectfully solicited as to the moral, ethical and religious means and methods of achieving permanent inter-racial goodwill, peace and harmony, and union of minds and hearts among all the people in Sri Lanka.

The columns of your esteemed Journal could be made use of for the expression of thoughts relevant to this all important subjet and I hope your Journal will readily welcome all such contributions from all individuals, organizations and institutions.

S. Sivasubramaniam
103/2, Hulftsdorp Street,
Colombo 12.

## Cultural Idol of Catholics

A simple tomb-and that is all. The funeral mass was "Pious and Simple"

The entre world has been moved by the reverence that marked a very workable event Pope Paul VI has left behind a great religious tradition that has universal acceptance.

Simphaty and piety combined in splendid manner everything Pope Paul VI din and dictater extremely solemn.

Here was an idol of unmesserable value to the Catholis's all the world over.

Other religionist fail him as a noble soul.

## தமிழ்நாட்டில்சேக்கிழார்

(2-ஆம் பக்கத்து வளர்ச்சி)

பத்து மூன்று நாயன்மார்களுடைய தொண்டின் நெறியுற பரவும்படி செய்வதற்கு 'சேக்கிழார் மன்றம்' இன்று ஆரம்பமாகின்றதென்றும் கூறினார்.

பேராசிரியர் வெள்ளைவாரணர், வயிநாகரம் பால்கவி ராமநாதச் செட்டியார், முதுபெரும் புலவர் ஏ. நடேச முதலியார், மகா வித்துவான் காஞ்சிபுரம் திரு. அருணைவடிவேல முதலியார், சென்னை மறை திருநாவுக்கரசு மற்றும் பேராசிரியர்களும் கருத்துரை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org